பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 270 சனி 10-11-1990 (ஐப்பசி 24) ந. ஆகிர் 21

# இந்தியாவின் 9-வது பிரதமராக சந்திரசேகர் இன்று பதவியேற்பு



இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக திரு. சந்திரசேகர் (63) இன்று காலை பதினொரு மணியளவில் பதவிஏற்கிறார். நேற்றுககாலை ஜனாதிபதி வெங்கடராமன், சந்திரசேகரை அழைத்து புதிய அமைச்சரவையை அமைக்குமாறு உத்தியோக பூர்வமாக கேட்டுக்கொண்டார். இம் மாதம் இருபதாம் திகதிக்கு முன்னதாக சந்திரசேகர் தனது பெரும்பான்மைப் பலத்தை லோக்சபாவில் நிரூபிக்குமாறும் ஜனாதிபதி கேட்டுள்ளார். இதற்கு சம்மதித்துள்ள சந்திரசேகர் தமக்கு 280 லோக்சபா உறுப்பினர்களின் ஆதரவு குறித்தான ஆவணங்களை ஜனாதிபதியிடம் சமர்ப் படைத்துள்ளார். இது குறித்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி வெங்கடராமன் நாட்டின் தற்போதைய நிலையில் பொதுத்தேர்தல் உகந்ததல்ல எனக் குறிப்பிட்டார். இதேவேளை சந்திரசேகரின் அமைச்சரவையில் எத்தனை அமைச்சர்கள் நியமனம் பெறுவார்கள் என்பது குறித்து தெளிவாகவில்லை. இவர் தொடர்ந்து அமைச்சரவை குறித்து சககட்சி களுடன் ஆராய்ந்து வருகின்றார். திரு. சந்திரசேகர் கடந்த முப்பது வருடங்களாக இந்திய அரசியலில் ஈடுபாடு கொண்டவராக இருந்த போதிலும் இது வரை எந்த அமைச்சர் பதவியையும் வகிக்காதவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1927 ஜூலை முதலாம் திகதி உத்தர பிரதேசம் பக்ளா என்ற பகுதியில் பிறந்த இவர் அரசியலில் பட்டம் பெற்ற பின்னர் 1962 இல் இவர் ராஜ்யசபா உறுப்பினரானார். 1964 இல் இவர் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்டார். இந்திரா காந்தியின் அவசரகால நிலைச் சட்டத்தின் கீழ் இவர் கைது செய்யப்பட்டார். 1977 ஜனதாக்கட்சி ஆட்சிபீடம் ஏறிய போது அதன் தலைவரானார். கன்னியா

— 04 ஆம் பக்கம் பார்க்க

★ யாழ் போதனா வைத்தியசாலை மீளத்திறந்த கையோடு அதன் முன்பாகவே

# பாதுகாப்பு வலயத்துக்குள் இருமுறை விமானத் தாக்குதல்

## நான்கு கட்டடங்கள் சேதம்

பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் முறைப்படி அறிவித்த பின் யாழ் போதனா வைத்தியசாலை ஆரம்பித்த நேற்றுக் காலை 7,45 மணியளவில் பொம்மர் வைத்தியசாலை எல்லைக்குள்ளேயே இரு தடவைகள் குண்டுகளை வீசியது,

இந்த அத்துமீறல் பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஜெனிவாவில் உள்ள அதன் தலைமைச் செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

நேற்று வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று ஆஸ்பத்திரி வளவின் தென் கிழக்கு மூலையின் தாதிகள் பயிற்சிக் கல்லூரியின் முன்பாக விழுந்து கல்லூரியை சேதப் படுத்தியது.

இதனால் ஆஸ்பத்திரி வளவிற்குள் வேலை செய்து

—04 ஆம் பக்கம் பார்க்க

## பாஷையூரில் வீடுகள் சேதம்

பாஷையூரில் நேற்றுக் காலை 8-30 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு அருகில் உள்ள எஸ். ஜே. யோசப் (சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர்) என்பவரின் வீட்டின் மீது போடப்பட்ட ஒருகுண்டினால் அவ் வீடு முற்றாக சேதமடைந்தது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரியில் நால்வர் பலி

சாவகச்சேரியில் நேற்றுக் காலை 10-45 மணியளவில் தபாற்கந்தோர் வீதியில் வீசப்பட்ட குண்டினால் நான்கு பொதுமக்கள் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார். இத்தாக்குதலில் ராஜின்ஸ் வெல்டிங் வேக்ஸ், முற்றாகச் சேதமடைந்தது. அத்துடன் ராஜகுலசிங்கம், தில்லை நடராசா ஆகியோரின் வீடுகளும் சேதமடைந்தன.

(71,ப-32,4-5)

## நல்லூரிலும் தாக்குதல்

நேற்று நல்லூர் கோவில் வீதிக்கு அருகாமையில் குண்டு வீச்சு இடம் பெற்றது. இவ்விடத்தில் முதல் விழுந்த குண்டினால் யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு. ராசரட்ணத்தின் வீடுசேதமடைந்தது. ஒருவர் காயமடைந்தார்.

அடுத்த குண்டு கோயில் வீதியில் ஏ. தமசிலாவம் வளவில் விழுந்ததனால் இவரது வீடும் வேறு இருவரின் வீடுகளும் சேதமடைந்தது.

(74,71,33)

## பலாலிவீதியில் வீடுகள் சேதம்

நேற்று மாலை 3 மணியளவில் பலாலிவீதியில் உள்ள நீதிராஜாவின் வீட்டில் இரு குண்டுகள் விழுந்து வெடித்ததில் அவ்வீடு முற்றாக சேதமடைந்தது.

மற்றைய குண்டு பிள்ளையார் வீதியில் விழுந்ததினால் சிறி.வைகுந்தநாதன், இ கதிர்காமநாதன், எஸ். சிறிக்காந்தன் ஆகியோரின் வீடுகளும், சுற்றுமதிலும் சேதமடைந்தது

இன்னொரு குண்டு சரவணமுத்து மாஸ்டர் வீட்டில்

—04 ஆம் பக்கம் பார்க்க

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிக்கை:

தெளிவான வரையறை செய்யப்பட்ட

## பாதுகாப்பு பகுதிக்குள் குண்டுவீச்சு

நேற்றுக்காலை 7 45மணியளவில், ஸ்ரீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான சியாய்மா ஸெற்றிரக பொம்மர் விமானமொன்று மீளத் திறக்கப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பாதுகாப்புகுட்பட்ட, யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலை வலயத்தை வட்டமிட்டபின், தாளப்பறந்து, ஆஸ்பத்திரி வீதி, - பருத்தித்துறை வீதிச்சந்தியில், செஞ்சிலுவைக் குறியிடப்பட்ட, ஆஸ்பத்திரிவளவின் தென் கிழக்கு மூலையில் ஒரு குண்டைப்போட்டது.

மேலும் சில தடவைகள் வட்டமிட்ட அதேவிமானம் ஆஸ்பத்திரி எல்லைக்கு அண்மையில் தெளிவாக வரையறுக்கப்பட்ட பாதுகாப்புப் பிரதேசத்துக்குள், இரண்டாவது குண்டையும் வீசியது.

இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று ஒரே நேரத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு, ஜெனிவா ஆகிய இடங்களில் உள்ள தனது பணிமனைகளில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க




குறிப்பு. X சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலைய எல்லை
● நீல நிறமிடப்பட்ட பகுதியே நேற்று விமானம் வீசிய குண்டுகள் வீழ்ந்த இடங்கள்.

# வேலணை கோட்டப்பிரிவில் பல புதிய நியமனங்கள்

வேலணைக் கோட்டம்-நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றும் இரா. சின்னத்தம்பி உடனடியாக வேலணைக்கோட்டக் கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபராகவும், கொத்தணி அதிபராகவும் கடமையாற்றிய இவர் இலங்கைக் கல்வி நிர்வாகச் சேவையில் தரம் இரண்டைச் சேர்ந்தவராவார்.

தற்போது யாழ் புனித மரியாள் றோ. க.த. க. பாடசாலையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றும் பி. எம். ஜே. அன்ரனி உடனடியாக நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார். இவர் நெடுந்தீவுக் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றுவார். இவர் அண்மையில் அதிபர் தரம் ஒன்றிற்கு கல்விச் சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்த்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றும் சோ. தில்லைநாதன் நயினாதீவு மகாவித்தியாலய அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார் இவர் நயினாதீவுக் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றுவார். இவர் அதிபர் தரம் இரண்டைச் சேர்ந்தவராவார். (ப-17)


## சிறு விளம்பரம்

### சேவை
தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். ''ஸ்கைலைன்ஸ்'' 281B, மணிக்கூட்டுக் கோபுரவீதி, யாழ்ப்பாணம். ''Sky-lines' 281B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சிதபாற் கந்தோர் அருகாமை). 11025

### தேவை
27 வயதிற்குட்பட்ட, வெளிநாடு செல்லக்கூடிய பிராமணகுல மணமகள் தேவை. விபரங்கட்கு நேரில் தொடர்பு கொள்ளவும். திருமதி இராஜரத்தினஐயர், ''மங்களபதி'' பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி. 41/5, அரச்வீதி, நல்லூர். 11052

### தேவை
சீமெந்து, கோழித் தீன் வெற்றுப் பைக்கெற்றுக்கள் தேவை. மில்க்வைற்-யாழ்ப்பாணம். 11055

### புத்தகம்
தமிழ்ப் பாலர்களின் கல்விக் களஞ்சியம்! நால்வர்ணப் பதிப்பு அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ் (சீர்திருத்த எழுத்துக்களுடன்) விலைரூபா 12/-. ஆட்பேப்பரில் ரூபா15/. மொத்தமாகவும் பெறலாம் மண்டேலா ரேடர், பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. 11049

### விற்பனை
கால்நடைத்தீவனமாகவும் விறகாகவும் பயன்படும் இப்பில் இப்பில் விதைப் பைக்கற் பெற்றிட ரூபா 2 00 க்கான அஞ்சல் முத்திரை அனுப்பவும். மில்க்வைற்-யாழ்ப்பாணம். 11057

### விற்பனை
நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபட நீம் சுகாதார தூபம் பைக்கெற் ஒன்று ரூபா 1/- மட்டுமே. திருநெல்வேலியிலும் இணுவிலிலும் அண்ணா கோப்பிக் கடையில் கிடைக்கிறது. மில்க்வைற்-யாழ்ப்பாணம். 11056


## மாவீரர் நினைவாகப் பனந்தோப்பு

மாவீரர் நினைவாக நாயன்மார்கட்டுப் பகுதியில் அமையவிருக்கும் இரண்டு மாதிரிப் பனந்தோப்புக்களை உருவாக்குவதற்கென ஒன்பது பேர் கொண்ட குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டுளளது.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெற்ற மரம் நடுகை தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாவீரர் ஞாபகார்த்தமாக வடக்கில் பல்வேறு பகுதிகளிலும் மரம் நடுகையை விரிவுபடுத்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. (33)


யாழ் பல்கலைக்கழகம், இலங்கை

கலைப்பீடம்

பொதுக் கலைமாணிப் பரீட்சை - 1989

மேற்படி பயிற்சிநெறிக்கான மாணவர்கள் புவியியலுக்கான தமது ஆய்வுக் கட்டுரையை 20-11-1990க்கு முன்பாகப் பரீட்சைக்கிளையில் சமர்ப்பிக்கவும்.

காலதாமதமாகச் சமர்ப்பித்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்.

பரீட்சைக் கிளை,
யாழ் பல்கலைக்கழகம்,
1990-11-08

11058



## 5-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

### அகஸ்தீன் சதீஸ்குமார் (மதன்)

தமிழீழம் மீட்கப் புறப்பட்ட வீரவேங்கையே, இடையில் உன் வீர ஆவேசத்துக்கு தடையிட்டு உன் உயிருக்கு குறிவைத்தானோ இரத்தவெறி கொண்ட அரக்கன். வீரனே உன் வீர கோசம் என்றும் எங்கும் ஒலிக்கட்டும்.

புலோப்பளை கிழக்கு, பளை.

செலஸ்தீன் குடும்பத்தினர் 11051


★ கடற்றொழில் அமைச்சு திருமலைக்கு இடம் மாறுகிறது

### மீன்பிடி அபிவிருத்தி என்ற போர்வையில்

# திருமலையில் சிங்களக் குடியேற்றம்

திருகோணமலையில் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதென்ற போர்வையில் சிங்கள மீனவர்களைப் பெருமளவில் அங்கு குடியேற்றத் திட்டமிடப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு ஏதுவாகக் கடற்றொழில் மற்றும் நீரியல்த் துறை அமைச்சு அடுத்த ஜனவரி முதல் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு இடம் மாற்றப்படவுள்ளது.

இதற்கான கட்டிடங்கள் திருமலையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கடற்றொழில் அமைச்சில் கடமை புரிந்துவரும் சிங்கள ஊழியர்கள் அனைவரும் ஜனவரி முதல் திருமலையில் கடமை புரியத் தயாராக இருக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர்.

கடற்றொழில் அமைச்சு அலுவலகம் கொழும்புக்கு வெளியே இடம் மாற்றப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

மீன்பிடி அபிவிருத்தி என்ற பெயரில் குடியேற்றப்படவுள்ளவர்களுக்கு மீன்பிடி வள்ளம், வலை மற்றும் உபகரணங்கள் என்பன மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளதோடு வேறுபல வசதிகளும், சலுகைகளும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அச்சுவேலி வைத்திய அதிகாரி விளக்கம்

'அச்சுவேலி ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் அவதி' என்ற தலைப்பில் கடந்த 23-ம் திகதிய முரசொலியில் வெளியான செய்தி தொடர்பாக அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி விளக்கக் கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

செய்தியில் குறிப்பிடப்பட்ட தினம் பொம்மர் சுற்றியதால் சேலைன் ஏற்றப்பட்ட நோயாளியை அப்படியே விட்டு விட்டு ஓடவேண்டிய நிலை ஊழியர்களுக்கு ஏற்பட்டதெனவும் எனினும் பின்னர் அந்த நோயாளிக்குச் சிகிச்சை வழங்கப்பட்டதெனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வைத்தியசாலையின் தரமும், வசதியின்மையும் காரணமாக பிரசவத் தாய்மாரைச் சில வேளைகளில் பொறுப்பேற்காது பெரிய மருத்துவமனைகளுக்குச் செல்ல ஆலோசனை தெரிவிக்கப்பட்டதாகவும், குண்டுவீச்சு வேளைகளில் சில வேளைகளில் வைத்தியசாலை அசாதாரண சூழ்நிலை காரணமாகச் சில மணி நேரம் மூடப்பட்டிருக்கலாமெனவும், எனினும் தொடர்ச்சியாக மூடப்பட்டிருக்கவில்லை எனவும் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

## சாவகச்சேரியில் போலி வியாபாரிகள் புலிகளால் கைது

சாவகச்சேரிச் சந்தையில் கலப்படம் செய்யப்பட்ட தரம்குறைந்த நல்லெண்ணை விற்ற பலரை விடுதலைப் புலிகள் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரிச் சந்தைப் பகுதியைச் சுற்றி நடைபாதையில் நின்று இவர்கள் இவ் எண்ணையைப் போத்தல் 50 ரூபாவிலிருந்து 60 ரூபாவாக விற்பனை செய்கையில் கைதுசெய்யப்பட்டார்கள்.

இவ்வாறு கடந்த ஒரு வார காலமாக இந்தப் போலி நல்லெண்ணை விற்பனை சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் இடம்பெற்று வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப- 32)

## நாயன்மார்கட்டில் விசேட இலவச வகுப்புக்கள்

பாதிப்புக்குள்ளாகிய மாணவமாணவிகளது நன்மை கருதி க. பொ. த. வகுப்புக்களில் கல்விபயிலும் நாயன்மார்கட்டு, அரியாலைப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

நாயன்மார்கட்டு அம்பாள் வீதியிலுள்ள தனியார் இல்லமொன்றில் கிழமை நாட்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இந்த இலவச வகுப்புக்கள் பிரபல பட்டதாரி ஆசிரியர்களான சு. சொக்கலிங்கம், யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி. கமலநாதன் ஆகியோரால் நடாத்தப்பட்டுவருகின்றது. (33)

## கொழும்பில் நாய்களுக்கு வந்ததே ஆபத்து!

இந்த நாட்டிலுள்ள நாய்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும், இலங்கைக்குத் தொழில் நிமித்தம் வந்து தங்கியிருக்கும் கிழக்கு ஆசிய நாட்டவர்கள் நாய்களைக் கொன்று தின்று தீர்க்கிறார்களென்றும் மிருகவதைத் தடுப்புச் சங்கமொன்று போர்க்கொடி உயர்த்தியுள்ளது.

'கல்கவா மித்ரோ' என்றழைக்கப்படும் இந்த அமைப்பு கொழும்பிலுள்ள சம்பந்தப்பட்ட நாடுகளின் தூதுவராலயங்களுக்கு இது தொடர்பாகக்கடிதங்களை அனுப்பத்தீர்மானித்துள்ளது

இரத்தினபுரியில் நாய்கள் பெருமளவில் அருகி வருகின்றன என்றும் அங்குள்ள வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு உள்ளூர்வாசிகள் நாய்களைப் பிடித்து விற்கிறார்களென்றும் கூறப்படுகின்றது.

கொழும்பு 5, டீ பொன்சேகா வீதியில் வெளிநாட்டவர்கள் வசிக்கும் வீடொன்றிலிருந்து மயிர்கள் வழிக்கப்பட்ட நிலையில் நாயொன்று தப்பியோடியதைத் தான் கண்டதாக அங்கு வசிக்கும் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சில சாரதிகள் வீதிகளில் திரியும் நாய்களை வாகனத்தால் மோதிக் கொன்றுவிட்டு உடல்களை எடுத்துச் செல்கின்றனராம். கொழும்புத் துறைமுகப்பகுதியில் வேலை செய்யும் சிற்றூழியர்கள் கப்பல் திருத்த வேலைகளுக்கென வரும் கிழக்கு ஆசிய நாட்டவர்களுக்கு விற்பதற்காக நாய்களைக் கொண்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சங்குப்பிட்டியில் படகு மூழ்கியது

சங்குப்பிட்டியில் இருந்து கேரதீவுக்கு வந்தபடகு கவிழ்ந்தது.

இதனால் அதில் கொண்டு வரப்பட்ட 60 மூடைகள் நெல், ஒரு மோட்டார் சைக்கிள் என்பன நீரில் மூழ்கின. நேற்றுக்காலை இவை மீட்கப்பட்டன. (70, 74, 72)

## காவலூர், காங்கேசன் வங்கிக் கிளைகள் இடமாற்றம்

இலங்கைவங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை கடந்த புதன்கிழமை முதல் யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளையின் கட்டிடத்தில் இயங்கிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காங்கேசன் துறைக்கிளை சில மட்டுப்படுத்தப்பட்ட சேவைக்காக மானிப்பாய் கிளைக்கட்டிடத்தில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தபால்கள் சென்றன

யாழ் குடா நாட்டுத் தபாலகங்களில் சேகரிக்கப்பட்ட 27 தபால் பொதிகள் நேற்று வெள்ளிக்கிழமை யாழ் பிரதம தபாலக உத்தியோகத்தர்களால் பருத்தித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டு நேற்று கொழும்பு சென்ற லங்கா சிறி கப்பலில் சேர்க்கப்பட்டது.

இத்தபால் பொதிகள் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வாகனத்தில் பருத்தித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டன. (33)

## தொ. நுட்பக் கல்லூரி ஆலோசனைக் கூட்டம்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியை மீண்டும் தொடங்குவது பற்றிய கூட்டம் 12-ம திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

சகல வணிக, பொறியியல், தொழில்துறை சார்ந்த விரிவுரையாளர்களையும் மாணவர்களையும் தவறாது சமுகம் கொடுக்குபடி கேட்கப்பட்டுள்ளது. (ப7)

## திறந்த பல்கலை விரிவுரைகள்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ் பிரதேச நிலையத்தில் எதிர்வரும் 25-ம் திகதி சிறுவணிக, முகாமைத்துவக் கற்கை நெறியின், 9-வது 10-வது ஒப்படைகளுக்குரிய பகல்நேர வகுப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிரதேச நிலைய மாணவர்களுக்குரிய உயர் தொழில் ஆங்கில கற்கை நெறியின் விரிவுரை வகுப்புக்கள் கடந்த 3-ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

சனி, ஞாயிறு இரு நாட்களும் எல்லாப் பிரிவினருக்கும் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் விரிவுரை நடைபெறும். எனவும் 10-ம் 11 ம் திகதிகளில் 3-வது மீள் பரீட்சை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப7)

முரசொலி

எமது சிந்தனை.

1990 — 11 — 10 சனி

''மருத்துவனே, உன்னையே குணமாக்கிக்கொள்''

— பரிசுத்த வேதாகமம்

# மனிதாபிமானம்

கொஞ்சக் காலத்துக்கு முன்பு பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தது; மகப்பேற்றுக்காக மருத்துவ மனை ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட தாயிடம் ஜெனரேற்றருக்கு மூன்று லீற்றர் டீசல் கோரப்பட்டதாம்.

டீசல் தேவைதான்; கொடுக்கவேண்டியது தான். ஆனால் அதன்பின் — சத்திர சிகிச்சைக்காக — 5000 ரூபா கேட்டாராம் டொக்ரர்!

மருத்துவ மனையில் நிற்கிறோமா வணிக நிலையத்தில் நிற்கிறோமா என்று திகைத்திருப்பார் அந்தத் தாய்!

முந்தாநாள் முரசொலியில் வெளியான கடிதம் நெஞ்சை நெருடுவது. இவ்வுலகைக் காணவிருந்த ஒரு சிசு—ஒரு நிபுணரின் அசிரத்தையால்—யமனுலகு புறப்பட்டு விட்டது! தவிர்த்திருக்கக் கூடிய இந்த மரணத்தினால் ஓர் இளந்தம்பதியின் கனவுகள் கலைந்து போயின.

டொக்ரர்கள் மீதோ மருத்துவ மனைகள் மீதோ குறைகாண்பதல்ல நமது நோக்கம். இக்கட்டானதொரு நிலையில் — மக்களுக்குத் தமது சேவை மிகவும் தேவைப்படும் ஒரு கட்டத்தில் — நாட்டை விட்டு வெளியேறியவர்களை விட, இந்த மண்ணுக்கு—மக்களுக்கு—தொண்டாற்றவென இங்கே இருப்பவர்கள் வணங்கத்தக்கவர்கள்; வாழ்த்துக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

குண்டுவீச்சாலும் ஷெல்லடியாலும் காயமுற்றும் உடல் ஊனமுற்றும் வரும் மக்கள் துயர்துடைக்க மருத்துவர்களும் தாதிமாரும் மற்றோரும் இரவு பகலாகப் பாடுபடுகிறார்கள். ஊரடங்கு அமுலில் இருக்கும் வேளைகளில் கூட தம் உயிரையும் பொருட்படுத்தாது சேவை செய்கிறார்கள்; பாராட்டுகிறோம்!

ஆனால், தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டோர் போன்ற சிலர் சுகாதார சேவையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படக் காரணராகின்றனர்.

மருத்துவம் ஒரு தொழில் தான்; ஜீவனோபாயந் தான். ஆனால் மக்களுடைய உயிர்காக்கும் இத்தொழில் பிற தொழில்களை விட மகத்துவம் மிக்கது

நோயாளி மருத்துவனைத் தெய்வமாகக் கருதுவது—அல்லது 'தெய்வத்துக்கு அடுத்ததாக நீங்கள்' என்று கும்பிடுவது— சர்வசாதாரணம்.

இந்த மரியாதைக்கு அருகதை உள்ளவர்களாகத் தம்மை உயர்த்திக்கொள்வது மருத்துவர்கள் கையில் தான் இருக்கிறது

அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றிக்கொண்டே 'பிரத்தியேக மருத்துவம்' (Private practice) செய்யும் சலுகை மருத்துவ நிபுணர்களுக்குண்டு பிரத்தியேகமாகப் பணம் செலுத்தி தம்மிடம் வருபவர்களையே, பிறகு, அரசினர் ஆஸ்பத்திரிகளிலும் 'கவனிக்கும்' நிபுணர்கள் இருக்கிறார்கள்.

இவ்வழக்கம் நிச்சயம் மருத்துவர்களின் பெருமைக்கு உகந்ததல்ல.

மருத்துவத்தொழிலை ஆரம்பிக்கும் ஒருவர் செய்யும் விசுவாசப் பிரமாணத்தை வகுத்தவர் பண்டைய கிரேக்க மருத்துவர் ஹிப்போகிறாரிஸ். அதன் ஒரு பகுதி இது:

''..நான் தீங்கு விளைக்கக்கூடிய எந்த மருந்தையும் யாருக்கும் கொடுக்க மாட்டேன். அது பற்றிய ஆலோசனை வழங்கவும் மாட்டேன் நோயாளியின் நன்மைக்காக அன்றி நான் எந்த வீட்டிலும் நுழையேன். நானாகவே எந்தக் குறும்பும் செய்யேன். மனிதர் வாழ்வில் நான் காண்பது, கேட்பது எதையும் பிறருக்குச் சொல்ல மாட்டேன்...''

இன்றைய நிலைமையைப் பார்க்கும்போது, இவற்றோடு—

''நோயாளியை மனிதாபிமானமாக நடத்துவேன்;
பொருள் வருவாயே குறியாக இருக்கமாட்டேன்''

என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கருதுகிறோம்.

தொடர் — 09

# 'முற்றுப் பெறாத யுத்தத்தின் முதல் 107 நாள்கள்'

''... 13.09.90 அதிகாலை 5.00 மணியளவில் சீனத்தயாரிப்பான ''வை-12'' ரக விமானமொன்று யாழ் நகரப் பகுதிக்கு மேலாகப் பறந்து 300 கிலோ கொண்ட பீப்பாக் குண்டுகளை வீசத் தொடங்கியது. சிறிது நேரத்தில் நடைபெற இருந்த தனது படைஎடுப்பிற்கு இறுதிநேர உதவியாகப் புலிகளின் நிலை எனத் தான் கருதிய இடங்களில் குண்டுகளை வீசியது. அத்துடன் கோட்டைக்குத் தெற்கே ஒரு கி. மீ தூரத்திலுள்ள சிறுத்தீவு என்ற இடத்தில் இரண்டு கடற்படைப் பீரங்கிக் கப்பல்களும் நிறுத்தப்பட்டிருந்தன.

''சரியாக 5.55 மணிக்கு கோட்டைக்குள்ளிருந்து எமது காவல் அரண்கள் அனைத்தையும் நோக்கிச் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது அது ஒரு வழமைக்கு மாறான சம்பவமாகத் தென்பட்டது. மண்டைதீவுக் கடலுக்குள் இருந்த எமது வீரர்களின்கண்களை கோட்டையின்மீது பதிப்பிப்பதற்காகவே அது செய்யப்பட்டது என்பதை சில நொடிகளில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

## விசைப் படகுகள்

''சிறுத்தீவிலிருந்து சுமார் 20 விசைப் படகுகள் கோட்டையை நோக்கி வருவதை எமது தோழர்கள் அவதானித்து விட்டார்கள். உடனடியாகவே அனைத்துக் காவல் அரண்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டு விட்டது எமது துப்பாக்கிகள் படகுகளை நோக்கி முழங்கின. படகுகள் புறப்பட்ட அதே நேரம் சிறுத்தீவுக் கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 பீரங்கிப் படகுகளும் குண்டுகளைப் பொழிந்தன. பொலிஸ் நிலையக் கட்டடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரணும், பண்ணைச் சந்தி உட்பட தொலைத்தொடர்பு நிலையக் காவல் அரண்களும் எதிரிகளின் பிரதான இலக்குகளாக இருந்தன.

## குண்டுமழை

''கோட்டைக்குள்ளிருந்தும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. விநாடிக்குப் பத்திற்கும் மேற்பட்ட எறிகணைகள் பீரங்கிக் குண்டுகள் எமது காவல் அரண்கள் மீது வீசப்பட்டது. நிமிடத்துக்கு ஆயிரக்கணக்கில் துப்பாக்கி ரவைகள் பொழியப்படுவதைப் போல-மழையென குண்டுகளும் வீசப்பட்டன.

''மழை பெய்யும் பொழுது ஒவ்வொரு அங்குல இடைவெளிக்குள்ளும் நீர்த்துளி விழுவதைப் போல எமது காவல் அரண்களுக்கு

'அரவிந்தன்'

மேலும், கீழும், முன்னும் பின்னும், அருகருகிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன. எமது சில காவல் அரண்கள் சரிந்தன. சில உடைந்தன. எமது தோழர்கள் சிலர் செத்து விழுந்தனர். சிலர் காயமடைந்தபடி முனகிக் கொண்டு கிடந்தனர் ஆனாலும் எஞ்சிய தோழர்களின் துப்பாக்கிகள் கடலை நோக்கி முழங்கியபடி கிடந்தன.

## படகுகள் மூழ்கடிக்கப்பட்டன

வந்த படகுகளில் ஆறு மூழ்கடிக்கப்பட்டன மற்றவைகள் தொடர்ந்தும் கோட்டையை நோக்கி விரைவாக முன்னேறாதவாறு தடுக்கப்பட்டன. எமது துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட ரவைகளுக்குத் தப்புவதற்காக எஞ்சிய படகுகளில் இருந்தவர்கள் கடலுக்குள் குதித்து கோட்டையை நோக்கி நடந்து செல்ல முற்பட்டனர்.

''இவர்களில் பலர் கடலுக்குள்ளேயே குண்டடிபட்டு விழுந்தனர். ஒரு சில படகுகள் மண்டைதீவிற்கே மீண்டும் தப்பியோடின. ஒரு சில படகுகள் காயமடைந்தவர்களுடன் மண்டைதீவிற்குச் சென்றன. ஒரு சில படகுகள் கோட்டையை நோக்கியும் இழுத்துச் செல்லப்பட்டன.

''ஆச்சரியமூட்டக்கூடிய விதத்தில் வேகமான திடீர்த் தாக்குதலைச் செய்து. புலிகளை மலைக்க வைத்து அவர்களின் காவல் அரண்களை உடைத்து அவற்றைக் கைப்பற்றி விடலாம் என எதிர்பார்த்தே சிங்கள இராணுவம் தாக்குதலைத் தொடங்கியது.

''ஆனால், அவர்களது திட்டத்தின் முதல் கட்டத்தை விழிப்புணர்ச்சியுடனும், நிதானமான எதிர்த் தாக்குதல் மூலமும் கடலுக்குள் வைத்தே முறியடித்தோம். 6 படகுகளை மூழ்கடித்தினாலும் தொடர்ந்தும் படகு மூலம் வேகமாக கோட்டையை அடையவிடாது தடுத்ததினாலும் அதைச் செய்தோம்.

''இதைத் தொடர்ந்து இராணுவம் எமது நிலைகளுக்குள்ளே புக முயற்சி செய்தது. இரண்டுவிதமான யுக்திகளை இதற்காக இராணுவத்தினர் கடைப்பிடித்தனர்.

1) பொலிஸ்நிலையக் கட்டிடத்தின் மீது தொடர்ச்சியான எறிகணைப், பீரங்கித்தாக்குதல்களை நடாத்திக்கொண்டு, அதே சமயம்

2) தொலைத்தொடர்புநிலையம் மற்றும் பண்ணைச்சந்திக் காவலரண்கள் மீது விமானத் தாக்குதலையும் அதற்கு அனுசரணையாக கோட்டையிலிருந்து பீரங்கித் தாக்குதலையும், RPG மூலம் ரொக்கற் தாக்குதலையும் நடாத்தியது.

''இதற்கு மத்தியில் கடற்கரையை அண்டியிருந்த, கோட்டை மதிலை அடைந்த இராணுவத்தினர் அங்கிருந்து நிலை எடுத்து, பண்ணைச் சந்தியிலிருந்த எமது காவலரண்களைக் கைப்பற்ற முயற்சி செய்தனர்.

## பண்ணைச் சந்தி அரண்

பண்ணைச்சந்தி காவலரண்களைக் கைப்பற்ற இராணுவம் எடுத்த இந்த முயற்சிகளை மனோ உறுதியை அடித்தளமாகக் கொண்ட தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்து முறியடித்தோம்

''சதுர வடிவில் தண்டவாளங்கள், மண் மூடைகள், ரயர்கள் கொண்டு ஒரு பலமான காவலரணை பண்ணைச் சந்தியில் அமைத்திருந்தோம். இக்காவலரணையும் தொலைத்தொடர்பு நிலையத்தையும் இணைக்கும் வகையில் எலிவளை போன்ற ஒரு தொடர் அகழியை அமைத்திருந்தோம்.

''இப்பண்ணைச் சந்தி அரணானது திறந்த வெளியில் எதிரிக்கு சவால் விடுவதைப் போல நிமிர்ந்து நின்றது இது கோட்டையிலிருந்து சுமார் 60 யார் தொலைவில் இருந்தது இக்காவலரணை உடைத்து அதைக் கைப்பற்றுவதன் மூலம் தொலைத்தொடர்பு நிலையத்தையும் புலிகளின் கையில்இருந்து மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் இராணுவம் செயற்பட்டது.

''தனித்திருந்த அக்காவல் அரண் விமானத்தால் தாக்கப்பட்டது. ஆர்.பி.ஜி மூலம் ரொக்கற்தாக்குதல் நடாத்தப்பட்டது. கோட்டை மதிலின் மீதிருந்த பீரங்கிகள் மூலம் தாக்கப்பட்டது. காற்று வீசுவதைப் போல துப்பாக்கிக் குண்டுகள் தாக்கின.

## புலிகளின் வீரப்போர்

''புயலுக்குள் அகப்பட்ட கப்பலைப் போன்று, அவ்வரண் பிய்த்தெறியப்பட்டது. தண்டவாளங்கள் உடைந்தன. ரயர்கள் எரிந்து, மண்மூடைகள் சிதறின. ஆனாலும் அதற்குள் இருந்து புலிகளின் துப்பாக்கிகள் வெடித்துக்கொண்டிருந்தன எலிவளை போன்ற தொடர்குழிக்கூடாக காயம் அடைந்த போராளிகள் அப்புறப்படுத்தப்பட்டனர். பதிலுக்கு புதிய புலிவீரர்கள் அவ்விடத்துக்குச் சென்று எதிரியுடன் கடுமையான யுத்தத்தை நடாத்திக்கொண்டிருந்தார்கள்.

''சிறிது நேரத்தில் அந்தக்காவலரணும் உடைந்துபோய் விட்டது. பின்னர் அதற்கு அருகில் இருந்த இன்னொரு காவலரணிற்குள் சென்று புலிவீரர்கள் போரிட்டுக்கொண்டிருந்தார்கள். தொடர்புக் கட்டிடத்திலிருந்து பண்ணைச்சந்திக் காவலரணுக்கு உதவிகள் செல்வதைத் தடுப்பதற்காக மூன்று போர் விமானங்கள் தொலைத் தொடர்பு நிலையப் பகுதியில் மாறிமாறிக் குண்டுகளை வீசத் தொடங்கின.

''அவ்விமானங்கள் குண்டுகளை வீசிக் கொண்டிருக்கப் பண்ணைச் சந்தி அரணை நோக்கி முன்னே வந்த இராணுவத்தினரும் எமது துப்பாக்கிகளுக்கு இரையாகிக் கொண்டு வந்தனர். பண்ணைச் சந்தியிலுள்ள எமது நிலைக்கு 5-6 யார் முன்னாலுள்ள காப்பிடப் பகுதியில் வந்து நிலை எடுத்திருந்தும் அரணைக் கைப்பற்ற முடியாது தடுக்கப்பட்டனர்.

புலிகள், காற்றைக் காப்பரணாக்கி உயிரை ரவைகளாக்கி எதிரியுடன் போரிட்டுக் கொண்டிருந்தனர்.

## 'ஒப்பறேஷன் போர்ட்'

ஒப்பறேஷன் போர்ட் இராணுவ நடவடிக்கையில் கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியில் கஜபாகு றெஜிமென்ட்டைச் சேர்ந்த 1, 4, 6 படைப்பிரிவினரும், சிங்க றெஜிமென்ட்டைச் சேர்ந்த 1 படைப்பிரிவினரும், கெமுனு படைப்பிரிவினரும் பங்கு கொண்டனர். மண்டைதீவிலிருந்தும், சிறுத்தீவிலிருந்தும் பரவைக்கடலைக் கடந்து கோட்டைக்கரையை அடைவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது இவர்களுக்கு விமானக் கடற்படைகள் உதவின 2000 இராணுவ வீரர்கள் பரவைக்கடலைக் கடக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர். 30 விசைப்படகுகள் ஆழமற்ற கடற்பரப்பில் பயன்படுத்துவதற்கென விசேஷமாகத் தயாரிக்கப்பட்டவை பயன்படுத்தப்பட்டன. (வளரும்)

MURASOLIE REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA 10-11-1990 சனிக்கிழமை

## கொக்குவிலில் ஒருவர் பலி

கொக்குவிலில் நேற்றுக் காலை 7.45 மணிக்கு குளம் கரை லேன் அருகில் உள்ள வெறும் வளவில் குண்டு வீசப்பட்டது.

இதனால்சந்தைக்குச் சென்று திரும்பிய செ. துரைரத்தினம் என்பவர் உயிரிழந்தார். பொன்னுத்துரை என்பவர் காயமடைந்தார். சில வீடுகள் சேதமடைந்தன. (74,70.ப11)

## அரியாலையிலும் குண்டு வீச்சு

நேற்றுக் காலை 10 மணியளவில் அரியாலை நெடுங்குளம் வீதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் நில அளவையாளர் ப, தவராசாவின்வீடும் பொ.இராமநாதன் ச. முத்துக்குமாரசாமி ஆகியோரது வீடுகளும்பலத்தசேதமடைந்துள்ளது.

சேமசுந்தரம் இராசம்மா (55) என்பவர் காயமடைந்தார். (47,33,71)

ச. தே. செ. ச. தலைவர் ஜோர்ஜ்பற்றஸன் கருத்து

# ஓர் சர்வதேச ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா அரசு மீறியது!

யாழ் போதனா வைத்தியசாலை அருகே பாதுகாப்பு வலயத்தினுள் ஸ்ரீலங்காப் படையினரின் வான் அத்துமீறல் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் பொறுப்பாளர் ஜோர்ஜ் பற்றஸனிடம் செய்தியாளர் அவரின் தனிப்பட்ட கருத்தை கேட்டபோது.

''இது மிகவும் பாரதூரமான செயல். மக்கள் செறிந்து வாழும் பகுதியிலும், விடுதலைப்புலிகளின் தளம் ஏதும் இல்லாத பகுதியிலும் இத்தாக்குதல் நடைபெற்றிருக்கிறது.

### அரசு ஒப்பந்தத்தை மீறிவிட்டது

ஸ்ரீலங்கா அரசு ஒரு சர்வதேச ஸ்தாபனத்துடன்செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியிருக்கிறது.

### கொழும்பிற்கும் அறிவிப்பு

நேற்றுக் காலை நடைபெற்ற சம்பவம் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் அலுவலகத்திற்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

### மனிதாபிமான ரீதியாக இன்னோர் சந்தர்ப்பம்

இவ்வாறு இன்னொரு முறை நடைபெற்றால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒருதலைபட்சமாக தனது நடவடிக்கையை நிறுத்திக் கொள்ளும் எனவும் அப்போது ஜோர்ஜ் பற்றஸன் சுட்டிக் காட்டினார்.

மனிதாபிமானரீதியில் இப்பிரச்சனையை அணுகவேண்டும் என்பதற்காகவும் இன்னோர் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவுமே நேற்றைய தாக்குதலை சகித்து இன்னோர் சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக அவர் உறுதிபடத்தெரிவித்தார்.

# 3-ம், 4-ம் கட்ட இலவச உணவு விநியோகம் இன்று முதல் ஆரம்பமாகிறது

இடம்பெயர்ந்தோருக்கான 4 ஆம் கட்டமும், தொழில் இழந்தோர், வருமானமற்றவர்கள் ஆகியோருக்கான 3 ஆம் கட்ட இலவச உலர் உணவும், 1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோருக்கான ரொக்கப் பணத்திற்கான விநியோகமும் இன்று முதல் நடைபெறும்.

இவ் விநியோகம் யாவும் இம்மாதம் 25-ம் திகதிக்கு முன்னர் முடிக்க வேண்டும் என்று யாழ் பதில் அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்க அதிபரினால் விநியோகிக்கப் பட்டுள்ள புதிய உணவுப் பங்கீட்டு அட்டைகளுக்கே இவ் விநியோகம் நடைபெற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை யாருக்காவது புதிய உணவு அட்டைகள் வழங்கப்படாதிருந்தால் அப்பகுதிக் கிராமசேவையாளர்கள்உடனடியாக அவற்றை விநியோகித்து இவ் அட்டை மூலமே உணவு விநியோகம் நடைபெறுவதை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் பதில் அரச அதிபர் கேட்டுள்ளார்.

இம்முறை மண்ணெண்ணை விட்டாஸ்பிறே ஆகிய பொருட்களும் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படவிருக்கின்றன.

உணவு விநியோக பங்கீட்டு அளவுகள் நாளை அட்டவணையில் தரப்பட்டுள்ளன. 66)

## யாழ் ஆஸ்பத்திரி நேற்று முதல் மீள இயங்கத் தொடங்கியது

நேற்றுக் காலை 6 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலை மீள இயங்கத் தொடங்கியதும் அ. செல்வநாயகம் (58, மண்டைதீவு) என்பவர் முதல் நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். மேலும் 50க்கும் மேற்பட்ட நோயாளிகள் அனுமதிக்கப்பட்டனர்.

இதேசமயம் மானிப்பாயில் உள்ள நோயாளிகளும் இங்கு இடமாற்றப்பட்டனர். இங்கு கடமை புரியும் தாதிமார், டாக்டர்கள், ஊழியர்கள் வரவு குறைவாக இருந்தது. (71-ப-11)

## கும்பிறுப்பிட்டிக் காட்டில் புலிகள்-ராணுவம் மோதல்

நேற்றுமுன்தினம் திருமலையில் இறக்கக்கண்டி ராணுவ முகாமில் இருந்து வெளியேறிய ராணுவத்தினர் சலப்பையாறுமலை,கும்பிறுப்பிட்டி ஆகிய இடங்களில் முகாம் அமைத்துள்ளனர்.

இதேவேளை கும்பிறுப்பிட்டி காட்டுப்பகுதியில் மாலை 3 மணியளவில் இறங்கிய ராணுவத்தினருடன் புலிகள் மோதலில் ஈடுபட்டனர். இம் மோதலில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். கெத்திக்குளம் பகுதியில் மிதிவெடி வெடித்ததில் சிப் ஒருவர் காலிழந்தார்.

### வீரமரணம்

மாவிட்டபுரம் தாக்குதலில் காயமடைந்த கப்டன் செந்தில் (சுப்ரமணியம் ஞானேஸ்வரன் மர்தகல்) வீரமரணமடைந்தார். நேற்றுப் பலாலியில் நடைபெற்ற மோதலில் லெப். சிரஞ்சீவி (கனகசபாபதி ஐங்கரன் சுன்னாகம்) வீரமரணமடைந்தார்.

### பாஷையூரில்...

க. ஜொய்சி, க். ராஜகுமார், அ. அன்ரன் பீலிக்ஸ் ஆகியோர் இச்சம்பவத்தால் காயமடைந்தனர்.

மற்றய குண்டினால் அருகில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. (52, 27, 70, பு-25)

### பலாலிவீதியில்...

விழுந்ததில் இவரது வீடும் விநாயகமூர்த்தி என்பவரின் வீடும் சேதத்துக்குள்ளானது.

இப்பகுதியில் ஹெலிக்கொப்டரும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது. (71,74,33)

### இந்தியாவின்...

குமரியில் இருந்து வட இந்தியா வரை பாதயாத்திரை மேற்கொண்டு மக்களிடையே பிரபலமானார் 1989 இல் பதவிக்கு வந்த ஜனதாதளத்தின் உருவாக்கத்திற்கு இவர் கடுமையாக உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை

**மாவீரர் தினம் பற்றிய கலந்துரையாடல்**

மாவீரர் தினம் கொண்டாடுவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் சிறாம்பியடி லேனில் அமைந்துள்ள மணியம்ஸ் கட்டடத்தில் 11-11-90 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ப. நோ. கூ. சங்கத் தலைவர்களும், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களும், அங்கத்துவ சங்கப் பிரதிநிதிகளும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

சி. சிவமகாராசா
யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கம், தலைவர்

11059

யாழ் மாநகர சபைப்பகுதி

## செப்ரம்பர் மாத வவுச்சர்கள் செயலகத்தில் வழங்கப்படும்

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களது செப்ரம்ர் மாத வவுச்சர்கள் 12-ம் திகதி திங்கட்கிழமை முதல் 3 நாட்களுக்கு யாழ் செயலகத்தில் வைத்து வழங்கப்படும்.

தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு மானிப்பாய் இலங்கை வங்கியில் வைத்து வவுச்சர்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக செயலக ஓய்வூதியக் கிளைக் கணக்காளர் திரு. செ. சிவபாலன் தெரிவித்தார்.

இதேவேளை கிராமிய வங்கிகளில் அந்தந்தப் பகுதியில் உள்ளோருக்கான வவுச்சர்கள் வழங்கப்படுவதோடு ஏனையவர்களின் ஓய்வூதிய வவுச்சர்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும் எனவும் கணக்காளர் தெரிவித்தார். (66)

### தெளிவான...

இதன் விளைவாக, ச.தே. செ. சங்கப் பாதுகாப்பில் உள்ள ஆஸ்பத்திரிவளவினுள் ஒருவரும்,பாதுகாப்புப் பிரதேசத்தில் நால்வரும் காயமடைந்தனர்.

இத்தாக்குதலால் ஆஸ்பத்திரிக் கட்டடங்கள் நான்கின் கூரைகள் - யன்னல்கள் பெயர்த்து வீசப்பட்டுள்ளன.

இதுபோன்ற பாரதூரமான அத்துமீறல்கள் இனியும்இடம் பெறாதவாறு, உறுதியான உத்தரவாதங்களைப் பெறும் நோக்குடன் ச. தே. செ. சி. சங்கம் ஸ்ரீலங்கா அதிகாரிகளுக்கு வலுவான முறைப்பாடு செய்தது.

பாதுகாக்கப்பட்ட வலயம், அதைச்சுற்றியுள்ள பாதுகாப்புப் பிரதேசம் இரண்டுக்கும் இருசாராரும் தரும் மதிப்பைப் பொறுத்தே, யாழ் போதனாவைத்தியசாலை, அதன்மீளத் தொடக்கப்பட்ட மனிதாபிமானப் பணியைத் தொடர்வது தங்கியிருக்கிறது என்பதை ச. தே. செ. சி. சங்கம் நினைவூட்டவிரும்புகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல்12.30மணியளவில் ச. தே செ. சி. சங்கத்தின் யாழ் பணிமனையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வறிக்கை வழங்கப்பட்டது.

இதன் பிரதிகள் பி.பி.ஸி. உட்பட சகல வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களுக்கும் வழங்கப்பட்டது.

### கடற்படை ட்ரக் புதையுண்டது

நேற்று முன்தினம் மாலை காரைநகர் கடற்படை முகாமிலிருந்து சீநோர் கட்டடத்தை நோக்கிச் சென்ற கடற்படையினரின் ''ட்ரக்'' வாகனம் சேற்றில் புதையுண்டது.

இதனையடுத்து அதை மீட்கச்சென்ற கடற்படையினர் பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். (ப-31)

### மானிப்பாயில் ஹெலி வட்டமிட்டது

மானிப்பாய் மெமோறியல் ஆஸ்பத்திரி மீது நேற்று மாலை 3 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று ஆறு தடவைகள் தாழ்வாகப் பறந்து வட்டமிட்டது. எனினும் எவ்வித தாக்குதலும் இடம் பெறவில்லை. (ப 11)

அமைச்சர் ரஞ்சன் சொல்கிறார்

## நேற்றைய விமானத் தாக்குதல் தவறுதலாகவே இடம்பெற்றதாம்

நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்கு அருகிலும் பாதுகாப்பு வலயத்திற்கு உள்ளும் நடாத்திய விமானத்தாக்குதல் குறித்து பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவுக்கு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தால் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே வானொலி தொலைத் தொடர்புச் சாதனமூலம் உடனடியாகவே அறிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் இத்தாக்குதல் தவறுதலாக இடம்பெற்றதாகவும் இனிமேல் இவ்வாறான சம்பவம் இடம்பெறாது எனவும் தெரிவித்துள்ளார் (ப11

## வடபகுதி ரயில்வே ஊழியர்கள் ஓய்வுபெற விண்ணப்பம்

சுய விருப்பத்தில் இளைப்பாறும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகியமாவட்டங்களைச் சேர்ந்த புகையிரதப் பகுதி உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் பலர் ஓய்வூதியம் பெறுவதற்கு விண்ணப்பங்களை அனுப்பி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பாதுகாப்பு—

கொண்டிருந்த ஆர். ராஜசிறிப்பிரியா (கொழும்புத்துறை) என்பவர் காயமடைந்தார்.

தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள இலங்கை வங்கிக் கிளையும் சேதத்திற்குள்ளானது. வங்கி வாடிக்கையாளர்களான த. அருணாசலம் (உரும்பராய்), எஸ். வினோதினி (யாழ்ப்பாணம்) ஆகியோர் காயமடைந்தனர்.

குடா நாட்டு வரை படம்

இன்றைய முரசொலியுடன் இலவச இணைப்பு!

கேட்டுப் பெறுக!

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 10-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.